Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.942/2025

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. காளிராஜன் | Occupation | தலைமை காவலர் |
| Father's name | வேல்ச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of June 2026.

12.06.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மம்சாபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 18.10.2024 அன்று காலை 10.00 மணிக்கு 2058 தகா திரு.சவரணக்குமார், சார்பு ஆய்வாளர் பாரதிராஜா மற்றும் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்மந்தமாக மம்சாபுரம் எஸ்பிஎஸ் தேங்காய் பேட்டை அருகே ரோந்து சுற்றி வரும்போது பையில் வெள்ளை பையுடன் பின்னர் கேட்டு பெயர் விலாசம் தெரிந்து கொண்ட கணேஷ்குமார் என்பவர் கையில் வைத்திருந்த வெள்ளை பையை வாங்கி சோதனை செய்தபோது அதில் சுமார் 180 எம்எல் பிடிக்கக்கூடிய மானிட்டர் பிராந்தி 16 எண்ணம் மதுபான பாட்டில்கள், ஓரியன் பிராந்தி 10 எண்ணம் மது பாட்டில்களும் வைத்திருந்தார். அரசால் தடைசெய்யப்பட்ட மதுபான பாட்டில்களை வைத்திருந்த குற்றத்திற்காக அவரை அந்த இடத்தில் சார்பு ஆய்வாளர் கைது செய்து அங்கு அத்தாட்சி தயார் செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே அத்தாட்சியில் கையொப்பமிட்டு எதிரியை சொத்துக்களுடன் காலை 11.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்தோம். எதிரிமீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. சார்பு ஆய்வாளர் என்னை

விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து என்னடையதுதான். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி மானிட்டர் பிராந்தி பாட்டில்களை கைப்பற்றியதாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கூறியுள்ளேனா என்றால் அதுபற்றி கூறியுள்ளேன். அத்தாட்சியில் மெக்லேன் பிராந்தி 16 எண்ணம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவமானது மம்சாபுரம் டு திருவில்லிபுத்தூர் மெயின்ரோட்டிலுள்ள எஸ்பிஎஸ் தேங்காய் பண்ணை அருகில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தேங்காய் பண்ணைக்கு எந்த திசையில் மேற்படி சம்பவம் நடந்தது என்பது பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அரசு மதுபானக்கடையின் தெற்கு புறம் மேற்படி தேங்காய்பண்ணை உள்ளது என்றால் சரிதான். மேற்படி தேங்காய் பண்ணையிலிருந்து சுமார் 100 முதல் 150 அடி தூரத்தில் தான் அரசு மதுபானக்கடை உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தன்று மேற்படி தேங்காய் பண்ணையில் ஊழியர்கள் வேலை செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி தேங்காய் பண்ணையின் உரிமையாளர் பெயர் விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் அவரது பெயர் வெங்கடேசன் ஆகும்.

மேற்படி தேங்காய் பண்ணையின் நுழைவு வாயிலில் எஸ்பிஎஸ் தேங்காய் பண்ணை என்றும் அதன் உரிமையாளர் பெயர் தங்கச்சாமி என்றும் அவரது புகைப்படத்துடன் கூடிய பலகை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி தேங்காய் பண்ணையின் உரிமையாளர் பெயர் தங்கச்சாமி என்றாலும் இவ்வழக்கிற்காக வெங்கடேசன் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரமான காலை 10.00 மணியளவில் திருவில்லிபுத்தூரிலிருந்து மம்சாபுரம் நோக்கியும் மம்சாபுரத்திலிருந்து திருவில்லிபுத்தூர் நோக்கியும் வாகனங்கள் வந்து கொண்டும் சென்று கொண்டும் இருக்கும் என்றால் சரிதான். அதேபோல் நடந்து செல்லும் நபர்களும் மேற்படி ரோட்டில் சென்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நடந்து சென்றுகொண்டிருந்த நபர்களை இவ்வழக்கின் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் அவர்களை விசாரித்தோம் ஆனால் அவர்கள் சாட்சிகளாக இருக்க முன்வரவில்லை.

அத்தாட்சியில் மேற்படி மதுபான பாட்டில்கள் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் எதிரி வைத்திருந்ததாக கூறப்படும் வெள்ளை நிற பை குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். எங்கள் காவல்நிலையத்தில் பொது நாட்குறிப்பு பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி தேதியில் நானும் தகா.சவரணக்குமார், சார்பு ஆய்வாளர் பாரதிராஜா ஆகியோர் சம்பவத்தன்று மேற்படி சம்பவயிடத்திற்கு சென்றிருந்தால் அதுபற்றி பொதுநாட்குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்படி பொதுநாட்குறிப்பேட்டை நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு பரிசீலணை செய்யப்படுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் மேற்படி எஸ் பி எஸ் தேங்காய் பண்ணையில் ஊழியர்கள் இருந்தார்கள் என்றாலும் அதன் உரிமையாளர் தங்கச்சாமி இருந்தார் என்றாலும் நாங்கள் அவர்களை இவ்வழக்கின் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

மேற்படி அரசு மதுபானக்கடை அருகில் அரசு அங்கீகரிக்கப்பட்ட மதுபான பார் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மதுபான பாரில் எதிரி கூலி வேலை செய்து வந்தது எனக்கு தெரியும் என்றால் சரிதான். பொதுவாக மதுபானங்கள் விற்பது சம்மந்தமாகவு' கள் விற்பது சம்மந்தமாகவும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவலர்கள் ரோந்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி மதுபானக்கடை சம்மந்தமாக மாதம் ஒரு வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்ற புள்ளிவிவரத்திற்காக எதிரி மீது பொய்யாக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது மதுபான பாட்டில்களை அருகிலுள்ள மதுபானக்கடையிலிருந்து நாங்கள் வாங்கி எதிரிமீது பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் தற்போது எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிபுத்தூர்.